# சங்க இலக்கியங்களில் பண்பாடு குறித்த சிந்தனைகள்

**கொ. அம்பேதகார்**
பதிவு எண் 12402, முனைவர் பட்ட ஆய்வாளர்
தமிழ்த்துறை, ஸ்காட் கிறிஸ்தவ கல்லூரி, நாகர்கோவில்
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி, இந்தியா

**முனைவர் அ. பாக்கியமுத்து**
நெறியாளர், இணைப் பேராசிரியர், தமிழ்த்துறை
திருவள்ளுவர் கல்லூரி, பாபநாசம்
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்
திருநெல்வேலி இந்தியா

மலர்: 10

சிறப்பிதழ்: 1

மாதம்: ஜூலை

வருடம்: 2022

P-ISSN: 2321-788X

E-ISSN: 2582-0397

DOI:
https://doi.org/10.34293/sijash.v10iS1-Jul.5052

## முன்னுரை

கரடுமுரடான நிலத்தைப் பயன்படுத்தி வேளாண்மைக்கு ஆயத்தப்படுத்துவதுவதைப் போல மனிதனின் உள்ளத்தைப் பயன்படுத்துவது பன்பாடாகும். பண்பாடு இனத்துக்கு இனம், நாட்டுக்கு நாடு வேறுபட்ட தன்மையுடையது. ஒரு பிரிவினர் பண்பாடு எனக் கருதுவது பற்றைய பிரிவினருக்கு முரண்பட்டதாக விளங்களாம். இவ்வுலகம் நிலைத்திருக்க பண்பாடுடையாரே காரணம் என்று கூறுவதோடு மட்டுமல்லாமல் இக்கட்டுரை சங்க இலக்கியங்களில் காணப்படும் பண்பாடு குறித்த சிந்தனைகளை எடுத்துரைப்பதாக அமைகிறது.

## பண்பாடு

பண்பாடென்னும் சொல் ஆங்கிலத்தில் "Culture" என்று சுட்டுவதற்கு நேராகவே "பண்பாடு" என்பது ஆளப்படுகிறது. இச்சொல் இப்பொருளில் முதன்முதலில் ஆண்ட பெருமை டி.கே. சிதம்பரமுதலியாருக்கு உரியது என்பர். "பண்படு" என்னும் சொல்லில் இருந்து அமைத்துக் கொள்ளப்பட்டது இச்சொல்லாகும். ஆங்கிலத்தில் "நன்செய் நிலம்" (Cultivated Land) எனப்படுகிறது. பயிர் விளைத்தல் என்னும் பொருளிலும் ஊரடவளையவந என்பது பயன்படுகிறது. நல்ல பழக்க வழக்கங்களை மேற்கொள்ளல் என்னும் பொருளிலும் இச்சொல் ஆளப்படுகிறது. எனவே "செம்மைப்படுத்தல்" என்னும் பொருள் இச்சொற்கு அமைந்துள்ளது.

நிலத்திற்கும் உள்ளத்திற்கும் இடையே நெருங்கிய தொடர்புண்மையை அறிந்த தமிழர்கள் இரண்டையும் "புலன்" என்ற சொல்லாற் குறித்தனர். ''நிலபுலன்'' மக்கள் உள்ளமென்னும் நிலத்தைத் தம் கவிதையோர் கொண்டு உழுது அறிவு விதைகளைத் தூவிப் பண்பாட்டு பயிரை வளர்க்கும் உழவராவார். எனவே தான்

**"நாயனாரும் சொல்லேருடிவர் பகை வேண்டாவென" எச்சரித்துள்ளார்.**

பண்பாடென்பது "ஒரு சமூகத்தின் நடத்தை முறைகளின் எல்லா வெளிபாடு களையும் கொண்டதே ஆகும். இதில் குழுவுக்குள் வாழும் இப்பழக்கவழக்கங்களால் நிர்ணயிக்கப்பட்ட மனிதச் செயல்பாடுகளின் தொகுப்பாகும்" என பிரான்ஸ் போவாஸ் கூறுவதாக ஜான் மோனகன் ரூ பீட்டர் ஜெனிட் கூறுகிறார். (சமூக பண்பாட்டு பானூடவியல்)

"சீர்படுதல்" என்னும் பொருள் கொண்ட "பண்ணுதல்" என்னும் சொல் ஆளப்படும். பல இடங்களையும் அறிஞர் பாவாணர் சுட்டிக் காட்டுகின்றார்.

அறிஞர் தெ.பொ. மீனாச்சிசுந்தரனார் அவர்கள் பண்பாட்டுக்குத் தரும் விளக்கம் பெரும்பாலும் சிறந்த வாழ்க்கைக்கு அடிப்படையாக அமைகின்ற உள்ள பாங்கின் வெளிப்பாட்டையே "பண்பாடு" என்கிறோம். அந்த வெளிபாடு சுமையுணர்வுகளாகவும் தடையுடை பாவனைகளாகவும் தோன்றும் "உடலைப் பற்றிய தன்மை மனதைப் பற்றிய தூய்மை நிலை பேச்சின் இன்மை இவையெல்லாம் பண்பாட்டில் அடங்கும் என்றும் கூறுகின்றார்.

மக்களின் பழைய வரலாற்றில் அவர்கள் இயற்றிக் கொண்ட கருவிகள், சமூகப் பழக்கம், வழக்கம், நம்பிக்கை, சமயம் முதலியவற்றால் பண்பாடு என்ற சொல்லை குறிக்கின்றனர். மக்களின் அறிவு ஆலம், ஒழுக்க உயர்வு, கொற்கை தலம், பண்புடைய வாழ்க்கை நலம் ஆகியவை மென்மையும் திருந்திய நிலைமை பண்பாடு எனலாம்.

**கற்பறம்**

சங்ககால சமூதாயம் பெண்களுக்கு மட்டுமே கற்பறத்தை வலியுறுத்தியது. கணவனைத் தவிர வேறு எவரைப் பற்றிய எண்ணமும் நெஞ்சிற்குள் புகாது கல்லைப் போலக் காத்தலே கற்பரம் எனப்பட்டது. வடவர் கூறும் அருந்ததி போன்ற கற்புடையவள் தலைவி என்பதை கலித்தொகையில்,

**"வடமீன் போல் தொழுது ஏத்த வயங்கிய கூற்பினாள்**
**தடமென் தோள் பிரியாமை பொருளாயின் அல்லதை"**

என்னும் பாடல் வரிகள் மூலம் அறிய முடிகின்றது. அருந்ததியின் கற்பு கண்ணகியின் கற்பைப் பேன்றது என்பதை சிலபதிகாரத்தில் தீதிலா வடமீனின் திறமிவள் திறமென்னும்'' (சிலம்பு 1:26) என்னும் வரிகள் விளக்குகின்றது. அகத்திணை காதல் வாழ்க்கையை களவு, கற்வு என இருவகையாக பிரித்து ஊரறியாமல் வயதுவந்த ஆணும், பெண்ணும் புணர்ந்து இன்புறும் பகுதி களவு எனப்பட்டது. தமரறிய ஊரறிய திருமணம் செய்து கொண்டு வாழ்வது கற்பறம் என அழைக்கப்பட்டது.

அரசியல்

சங்க காலத்தில் அந்தணர் மதிக்கப்பட்டனர். முக்கியமான காரியங்களை அரசர்கள் செய்வதற்குரிய காலத்தைப் புரோகிதர்கள் எடுத்துக் கூறினார்கள். நாழிகைகளை கணக்கிட வட்டில் கணக்கர் இருந்தனர். இதற்கும் தாழிகைவட்டில் எனும் கருவில் பயன்பட்டது. வளர் காப்பாளர் இரவில் துயிலாது நாழிகையை எண்ணிக் கொண்டு இருந்தனர் என்பதை

### காவல்

**கணக்கு ஆய் வகையின் வருந்தி, என்**
**நெஞ்சுபுண் உற்ற விழுமத் தானே**
**- (குறுந்தொகை 216)**

எனும் பாடலின் மூலம் அறிய முடிகின்றது. மேலும் நெறியில்லாது மக்களை வருத்திய பகை மன்னரை கொன்று அந்நாட்டு மக்களை மன்னர்கள் கமுத்து காக்கின்றதை,

**"ஊறு அஞ்சி நிழல் சேர்ந்தார்க்கு**
**உலையாது காத்து ஓம்பி**
**ஆறு இன்றிப் பொருள் வெஃகி அகன்ற**
**நாட்டு உறைபவர்"**

எனும் பாடல் வரிகள் உணர்த்துகின்றது.

### போர்

சங்க காலத்தில் மண்ணாசையும், புகழ் பெற வேண்டுமென்ற ஆர்வமும், போரில் மார்பின் மீது விழுப்புண்பட்டு இறந்தால் வீர சுவர்க்கமுண்டு என்று மக்கள் நம்பியிருந்தனர். தங்களை மற்றவர்கள் பெருமையாக பேச வேண்டும் என்ற எண்ணமும் அதிகம் இருந்ததால் ஒரு நாட்டில் உள்ள மன்னன் மற்ற நாட்டின் மன்னனுடன் போரிட்டு எல்லைகளை விரிவாக்கி எண் போர் நடக்க இருக்கும் நாட்டில் உள்ள கோழைகள், பெண்கள், குழந்தைகள் போன்றோருக்கு எந்த தீங்கும் வரக்கூடாது என்பதற்காக பிறையிறைவித்தும் பின் போரில் ஈடுபட்டனர் என்பதை,

**ஆவும் ஆணியற் பார்ப்பன மக்களும்**
**பெண்டிரும் பிணியுடையீரும் பேணித்**
**தென்புல வாழ்நாக் கருங்கடன் இறுக்கும்**
**பெண்பொற் புதல்வர் பெறா அதீகும்**
**எம்அம்பு கடிவிடுதும் விமீமரண் சேர்ப்பின்**

எனும் பாடல் வரி மூலம் அறிய முடிகின்றது.

### திருமணம்

குறிஞ்சி நிலத்தவர் அந்திலக் கருப்பொருளான வேங்கை மரத்தின் கீழிருந்து மனம் பேசினார் என்பதனையும், வேங்கைப்பு மலரும் காலத்திலேயே திருமணம் நடைபெற்றது என்பதை,

**"மெண்தோட் கிழவனும் வந்தனன்**
**நுந்தையும்**
**மன்றல் வேங்கைக் கீழிருந்து**
**மணம் நயந் தான் அம் மலைகிழ**
**வோற்கே,**
**(கலி 41)**

எனவும்,

**வருமே தோழி நன்மலை நாடன**
**வேங்கை விரிவிடம் நோக்கி**
**வீங்கிரைப் பணைத்தோள் வரைந்தனன்**
**கொளற்கே" - (கலி 34)**

எனும் பாடலடிகள் உணர்த்துகின்றன. நாளும், கோளும் பார்த்து நல்லநாளைக் கணித்துக் கூறுபவனிடம் கேட்டுச் சான்றோர் துணையுடன் தலைவியைத் தலைவன் பெண் கேட்டு வந்தமையை,

**"நெறிஅறி செறிகுறிபுரி திரிபறியா**
**அறிவனை முந்துறீஇ**
**தகைமிகு தொகைவகை அறியும்**
**சண்றவர் இனமாக**
**வேம்புரை மெண்தோட் பசலையும்**
**அம்பலும்**
**மாய்ப் புணர்ச்சியும் எல்லாம் உடன்நீ**
**ங்க**
**சேயுயர் வெற்பனும் வந்தனன்"**
**- (கலி 39)**

என்பதையும் மனம் பேசச் சான்றோரின் துணையினை நாடினர் என்பதனையும் பாடல் வரிகள் மூலம் அறிய முடிகின்றது.

### சிலம்பு பழித்தல்

திருமணத்திற்கு முன்பு இளமைத் தொட்டே தலைவி அணிந்திருந்த காற்சிலம்பைக் கலற்றுவதைதலைமரபுஇருந்துவந்ததையும் இதனை பெற்றோர் கொண்டாடினர் என்பதையும் அறிய முடிகின்றது. தன்மகள் காதலனொடு உடன்போக்கு ஈடுபட்டதை அறிந்த தாய்,

**"பெரும் பெயர் வழுதி கூடல் அன்ன**
**அருங்கடி வியனகர் சிலம்பும் கழியாள்"**
**- (அகம் 31)**

எனும் பாடலில் புலம்புவதை அறிய முடிகின்றது. பெண்கள் காலில் அணியும் சிலம்பு மண்ணால் செய்யப்பட்டதாகும். இச்சிலம்பை அணிந்திருக்கும் பெண்ணிற்கு திருமணம் ஆக வில்லை என்று அடையாளப்படுத்தும் குறியீட்டுத் தன்மை வாய்ந்த ஒன்றாகும். திருமணம் முடிக்கும் பருவம் வாய்த்த போது அச்சிலம்பைக் கலற்ற விழா எடுத்துள்ள செய்தி காணப்படுகிறது. அவை,

**" ததரல் வாய்ப்**
**சிலம்பு கழிஇய செல்வம்**
**பிறருணக் கழிந்த என் ஆயமழை அடியே"**
**(நற் 279)**

எனும் பாடலின் உடன்போக்கு மேற்கொண்ட தலைவியை நினைத்து தாய் வருந்துகின்ற நிலையினை இப்பாடல் உணர்த்துகின்றது. தலைவனின் தாய் அவருக்குச் சிலம்பு கழி நோன்பியற்றினாள் என அறிந்த தலைவியின் தாய் அந்நிகழ்ச்சியை கண்டு வந்தவரிடம்,

**நும்மனைச் சிலம்பு கழீஇய யரினதும்**
**எம்மனை வதுவை நன்மணம் கழிகெனக்**
**கொல்லன் வைனோ? - (ஐங் 399)**

எனும் பாடலில் வருந்துவதாக அறிய முடிகின்றது.

## குடும்பம்

கணவனும் மனைவியும் மனமாத்துத் தன்னலமின்றி ஒருவர் நலனில் ஒருவர் மனமின்றி இருவர் என்னும் நிலையின்றிக் கிழமை புண்டு வாழ வேண்டும் என்பதனை பல பாடல்கள் காட்டுகின்றன.

தலைவி தலைவனிடம்,

**இம்மை மாறி மறுமை யாயினும்**
**நீயா இயறென் கணவனை**
**யானாகியர் நின் நெஞ்சு நேர் பவளே -**
**(குறுந் 112)**

எனவும், காதலை உடற்காயம் அன்று, அதனையும் கடந்து நிற்பது, மனதளவில் உயர்ந்து நிற்பது மனைவியின் உடலழகு வற்றி நரை மூதாட்டியாக ஆனபோது முதல்நாள் கொண்ட அன்பு போலவே அவனைப் போற்றுவது கணவனின் கடமையாகும் என்பதனை,

**அண்ணாந் தேந்திய வனமுலை தளரினும்**
**பொன்னேர் மேனி மணியிற் றாழ்ந்த**
**நன்னெடுங் கூந்தல் நரையொடு முடியினும்**
**நீத்த லோம்புய்த புக்கே ரூர**

எனும் பாடலடிகள் மூலம் அறிய முடிகின்றது.

## வழிபாடு

மக்கள் வேனிற்காலத் தொடக்கத்தைக் காதற்கடவுளான காமன் விழாவாக கொண்டாடினர் என்பதனை,

**"மல்கிய துருத்தியுள் மகிழ்ந்துணைப் புணர்ந்து அவர்**
**வில்லவன் விழாவினுள் விளையாடும்"**
**-(கலி 35)**

எனும் பாடலும் உணர்த்துகின்றது. வீடுகளும் தெருக்களும் ஒளிவிளக்குகளினால் அழகுறுத்தும் பெற்றமையை

**மழைகால் நீங்கிய மாக விசும்பின்**
**குறுமுயல் மறுநிறம் கிளர மதி நிறைந்து**
**அறுமீன் சேரும் அகலிருள் நடுநாள்**
**மறுகு விளக்குறுத்து மாலை தூக்கிப்**
**பலவழரல் மூதூர்ப் பலகுடன் துவன்றிய**
**விழவுடன் அயர"-(அகம் 111)**

எனும் பாடலின் மூலம் அறிய முடிகின்றது.

## தை நீராட்டு

தைத்திங்களில் மகளிர் ஆறு குளங்களில் நீராடுவது சில செய்யுட்களில் குறிக்கப்படுகின்றது. பின்னரே இது மார்கழி நீராட்டு என மக்களால் அழைக்கப்பட்டது. மகளீர் கூட்டமாக நீராடுவர் என்பதனை

**"நறுவீ ஐம்பால் மகளிர் ஆடும்**
**தைஇத் தன்மயம் போலப்**
**பலர்பழந் துண்ணும் நின் பரததை மார்பே"**
**- (ஐங் 84)**

எனவும்,

**தையில் நீராடிய தவந்தலைப் படுவாளோ**

எனவும்,

**“தைஇத் திங்கள் தண்கயம் படியும்
பெருந்தோட் குறுமகள்”**

எனும் பாடலின் மூலம் உணர முடிகின்றது. மேலும் புதுப்புனல் விழாவின வையை நீராட்டை,

**தைஇய மகளிர்தம் ஆயமொடு அமர்ந்தாடும்
வையை வாருயர் எக்கர் நுகர்ச்சி -**

எனும் பாடல்களின் மூலம் உணர்த்து கின்றது.

## முடிவுரை

சங்க தமிழ் மக்கள் வாழ்க்கையில் பண்பாடு சிறந்து இருந்தது என்று கூறலாம். சங்ககால தமிழர் பகைவர் மனமும் புண்பட்டு வருந்தலாகாது என்று எண்ணிக் கண்ணோட்டத்தின் வருந்தலானது எண்ணக் கண்ணோட்டத்துடன் வாழ்ந்தனர். இயற்கைப் படைப்பின் மணிமுடியாக விளங்கும் மனிதன் தனக்கே உரிய சிறந்த பண்புகளாலையே பிற விலங்குகளினின்றும் வேறுபட்டு காணப்படுகின்றான் என்ற செய்திகளை இக்கட்டுரை வாயிலாக அறிய முடிகிறது.

## துணை நூற் பட்டியல்

1. ஜெயபால் இரா, அகநானூறு, ஹேடீர் சென்னை,
2. தட்சிணாமூர்த்தி, தமிழர் நாகரிகமும் பண்பாடும், யாழ் வெளியீடு, சென்னை, பதிப்பு - 1994
3. நாகராசன். வி, குறுந்தொகை, ஹேடீர், சென்னை - 600 098, பதிப்பு - 2004
4. புலியூர் கேசிகன், புறநானூறு, பாரி நிலையம், சென்னை, பதிப்பு
5. விசுவநாதன். அ, கலித்தைாகை, ஹேடீர், சென்னை
6. பக்தவத்லே பாரதி, பண்பாடு மானுடவியல், மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம், பதிப்பு - 2009
7. மூர்த்தி. அ.க, லியோவின் தமிழ் அகம் லியோ புக் பப்ளிசுர்கள், சென்னை, பதிப்பு - 2008